**சுருக்கம்**

வனம் – தேனி மாவட்டம் – பெரியகுளம் வட்டம் – 14–தாமரைக்குளம் கிராமம் – வெள்ளக்கரடு வன வட்டாரம் – நில அளவை எண்.1111–ல் உள்ள 119.09.5 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் –ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 13) துறை**

**அரசாணை (நிலை) எண்.114**

**நாள்: 20.07.2023**
**சோபகிருது– ஆடி, 04**
**திருவள்ளுவர் ஆண்டு–2054**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.29, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்.14) துறை, நாள். 19.02.2010.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–32. கடித எண்.டிஎஸ்2/32931/ 2022, நாள். 14.11.2022.

=======

**ஆணை :**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், 14, தாமரைக்குளம் கிராமம், வெள்ளக்கரடு வன வட்டாரம, நில அளவை எண்.1111–ல் உள்ள 119.09.5 எக்டர் நிலம் தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைக்க கோரும் அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 09.08.2023–ல் ஆங்கிலத்திலும், தேனி மாவட்டம் அரசிதழ் நாள் 23.08.2023–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 09.08.2023–ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசிடமிருந்து அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் தேனி மாவட்ட அரசிதழில் வெளியிடுமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளருக்கு அறிவுறுத்துமாறு அரசு மைய அச்சக பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய, கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

..2.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை தேனி மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹூ
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை – 625 007.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், தேனி.
வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,
ஸ்ரீவில்லிப்புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை.
மாவட்ட வன அலுவலர், தேனி.
வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர்.

<u>நகல்</u>:–

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD–IV) துறை,
சென்னை–9.
சட்டத் (Opinion) துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை–9.
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/7/2023
பிரிவு அலுவலர்
20/07/2023

**அரசு ஆணை (நிலை) எண்.114**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை,**

**நாள். 20.07.2023-ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,<br>சென்னை -9. | 2 | 2 |
| 2. | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்<br>(வனத்துறைத் தலைவர்), சென்னை-32. | 3 | 3 |
| 3. | மாவட்ட ஆட்சியர், தேனி. | 2 | 2 |
| 4. | வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,<br>ஸ்ரீவில்லிப்புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை. | 5 | 5 |
| 5. | மாவட்ட வன அலுவலர், தேனி. | 12 | 12 |
| 6. | வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர். | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

20/7/2023

**பிரிவு அலுவலர்**

20/07/2023

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை.**

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 16–ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கிய நிலப் பகுதியை 10.01.2024–ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | தேனி |
| 2. | வட்டத்தின் பெயர் | : | பெரியகுளம் |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 14, தாமரைக்குளம் |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | வெள்ளக்கரடு |
| 5. | நில அளவை எண் | : | 1111 |
| 6. | வன வட்டாரத்தின் பரப்பளவு | : | 119.09.5 எக்டர் |

**நாற்புற எல்லைகள்.**

**வடக்கு.**– இவ்வனவட்டாரத்தின் எல்லையானது கிராம எண்.14, தாமரைக்குளம் கிராமத்தின் நில அளவை எண்கள் 1200, 1198 மற்றும் 1111 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பிலிருந்து தொடங்கி, பொதுவாக வடகிழக்கு நோக்கி கிராம எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்கள் 1198, 1197, 1152, 1151, 1150, 1149, 3121, 1119, 1112, 3119 மற்றும் 3118 ஆகியவற்றின் தெற்கு எல்லை நெடுகிலும் சென்று எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்கள் 3118, 1076 மற்றும் 1111 ஆகியவை கூடும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**கிழக்கு.**– பின்னர், இவ்வெல்லையானது, எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்.1076–இன் மேற்கு எல்லை நெடுகிலும் பொதுவாக தெற்கு நோக்கிச் சென்று எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்கள் 1076, 3117 மற்றும் 1111 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**தெற்கு.**– பின்னர், இவ்வெல்லையானது எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்.3117–ன் வடமேற்கு எல்லை நெடுகிலும் பொதுவாக தென்மேற்குத் திசையில் சென்று, எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்கள் 3117, 3122, 1102 மற்றும் 1111 ஆகியவை சந்திக்கும் நாற்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

பின்னர் இவ்வெல்லையானது, எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண் 3122–இன் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு எல்லை நெடுகிலும் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு நோக்கிச் சென்று எண்.14, தாமரைக்குளம் கிராமத்தின் நில அளவை எண்கள் 3122, 1106, 1107 மற்றும் 1111 ஆகியவை கூடும் நாற்சந்திப்பு புள்ளியை அடைகிறது. பின்னர், இவ்வெல்லையானது, பொதுவாகத் தென்மேற்குத் திசையில் திரும்பி, எண்.14, தாமரைக்குளம் கிராமத்தின் நில அளவை எண்கள் 1107, 1108, 1109 மற்றும் 1110 ஆகியவற்றின் வடமேற்கு எல்லை நெடுகிலும் சென்று எண்.14, தாமரைக்குளம் கிராமத்தின் நில அளவை எண்கள் 1110 மற்றும் 1111 மற்றும் எண்.16, மேல்மங்கலம் கிராமத்தின் எல்லையில் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது. பின்னர் எண்.16, மேல்மங்கலம் கிராமம் மற்றும் எண்.14, தாமரைக்குளம் கிராமம் ஆகியவற்றின் பொது எல்லை நெடுகிலும் வடமேற்கு, தென்மேற்கு மேற்கு மற்றும் தென்மேற்கு நோக்கிச் சென்று எண்.16 மேல்மங்கலம் கிராமத்தின் வடமேற்கு மூலை எண்.14, தாமரைக்குளம் கிராமம் நில அளவை எண்கள் 1261 மற்றும் 1111 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது. பின்னர், எண்.14, தாமரைக்குளம் கிராமத்தின் நில அளவை எண்கள் 1261 மற்றும் 1260 ஆகியவற்றின் வடக்கு எல்லை நெடுகிலும் தென்மேற்கு நோக்கிச் சென்று எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்கள் 1260, 1259 மற்றும் 1111 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**மேற்கு**.– பின்னர் இவ்வெல்லையானது, எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்கள் 1259, 1258, 1250, 1249 மற்றும் 1247 ஆகியவற்றின் கிழக்கு எல்லை நெடுகிலும் பொதுவாக வடக்கு நோக்கி செல்கிறது பின்னர், பொதுவாக வடகிழக்குத் திசையில் திரும்பி எண்.14, தாமரைக்குளம் கிராம நில அளவை எண்கள் 1246, 1221, 1220, 1219, 1218 மற்றும் 1200 ஆகியவற்றின் கிழக்கு எல்லை நெடுகிலும் சென்று அதன் ஆரம்பப் புள்ளியை அடைகிறது

**அனுமதிக்கப்பட்ட உரிமைகள்**

இவ்வனவட்டாரத்தில் உரிமைகள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

20/7/2023
**பிரிவு அலுவலர்**
20/07/2023